இனிமையான குழந்தைகளே! காலனுக்கெல்லாம் காலன் உங்கள் அனைவரையும் அழைத்துச் செல்வதற்காக வந்துள்ளார். ஆதலால் நினைவின் மூலமாக பாவ கர்மங்கள் என்ற சுமைகளை அழித்து விடுங்கள். தனது தேகத்தின் மீதுள்ள பற்றுதலை நீக்கிவிடுங்கள்.

கேள்வி: பக்தர்களின் எந்த ஒரு அழைப்பை பாபா கேட்கின்றாரோ அப்போது பக்தர்கள் குஷி அடைவதற்குப் பதிலாக துக்கம் அடைகின்றார்கள்?

பதில்: பக்தர்களுக்கு எப்பொழுது துக்கம் வருகின்றதோ அப்போது கூறுகின்றார்கள், ஏ! பகவானே என்னை இந்த துக்கமான உலகத்திலிருந்து அழைத்துச் செல். இந்த மோசமான (தூய்மை யற்ற) உலகத்தில் நான் வாழத் தேவையில்லை, ஆனால் இந்த அழைப்பைக் கேட்டு பாபா அழைத்துச் செல்ல வரும்போது, அழுகின்றார்கள். நாங்கள் ஆரோக்கியமாக ஆகிவிடக் கூடிய ஒரு மருந்தைக் கொடுங்கள், என்று டாக்டர்களிடம் கூறுகின்றார்கள்.

பாடல்: தூரதேசத்தில் வசிப்பவரே.............

ஓம்சாந்தி தூரதேசத்தில் பாபாவும் வசிக்கின்றார், குழந்தைகளாகிய நீங்களும் வசிக்கின்றீர் கள். இப்போது இந்த பாபா இங்கு ஏன் வருகின்றார்? பாபாவை ஏன் நினைவு செய்கின்றார்கள்? ஹே! பகவான் வாருங்கள் எங்களை வந்து அழைத்துச் செல்லுங்கள் என்று ஆத்மா கூறுகின்றது; தனது வீடாகிய முக்தி தாமத்திற்கு அழைத்துச் செல்லுங்கள். காலனுக்கெல்லாம் மேலான காலனை அழைக்கின்றார்கள். யாரை அழைக்கின்றோம் என்று பக்தி மார்க்கத்தில் புரிந்து கொள்ளாமல் இருக்கின்றார்கள். எங்களை தூய்மை இல்லாத உலகத்திலிருந்து விடுதலை செய்து கூடவே அழைத்துச் செல்லுங்கள். நாங்கள் இங்கு வாழ அவசியமில்லை. ஏதாவது ஆத்மா உடலை விடும்போது மிகவும் துக்கம் அடைகின்றார்கள், அழுகின்றார்கள். இந்த உடலிலிருந்து முக்தி (விடுதலை) செய்யுங்கள் என்கின்றார்கள். ஆனால் முக்தி செய்யும்போது கதறுகின்றார்கள், அழு கின்றார்கள். பக்தியில் அழைக் கின்றார்கள் ஆனால் புரிந்து கொள்வதில்லை. சத்தியவான் சாவித்திரியின் கதை உள்ளது. ஓரே ஒரு ஆத்மாவை அழைத்துச் செல்லும்போது, சாவித்திரி அனுமதிக்கவில்லை. மனிதர்களுக்கு உடல் மீது மோகம் உள்ள காரணத்தால், ஆத்மா உடலை விட விரும்புவதில்லை. எங்களுக்கு அப்படிப்பட்ட மருந்து கொடுங்கள் நாங்கள் ஆரோக்கியமாக ஆகிவிட வேண்டும், நாங்கள் உடலை விட விருப்பமில்லை என்கின்றனர்; கூடவே பகவானே! வாருங்கள் எங்களை அழைத்துச் செல்லுங்கள் என்றும் கூறுகின்றார்கள். ஆச்சரியமான விஷய மல்லவா! இப்போது நீங்கள் மகிழ்ச்சியுடன் செல்கின்றீர்கள். மனிதர்களுக்கு உலகத்தில் உள்ள உற்றார், உறவினர்கள் மீது மோகம் உள்ளது. இப்போது கேட்கின்றார், என்ன உங்களை உற்றார் உறவினர்களிடமிருந்து விடுவிக்கவா? அழைத்துச் செல்கிறேன்; அப்படியானால் உறவினர்களின் நினைவை விடுங்கள். இறுதி சமயத்தில் குழந்தைகளை நினைத்துக் கொண்டிருந்தால் மறுபிறவி கூட அம்மாதிரி தான் கிடைக்கும். பாபா கூறுகின்றார், ஆத்மாக்களை உடலிலிருந்து தனித்து அழைத்துச் செல்வேன், பின்னர் உங்களுக்கு உற்றார், உறவினர் நினைவு வராது தானே? இறுதியில் ஒரு பாபாவைத்தான் நினைவு செய்ய வேண்டும். இங்கு மறுபிறவி எடுக்க வேண்டியதில்லை. ஆதலால் தேக

சம்மந்தம் யாவற்றையும் மறந்து கொண்டே செல்லுங்கள். தந்தையாகிய என் ஒருவனை மட்டும் நினைவு செய்யுங்கள். எதுவரை நீங்கள் தூய்மையாக வில்லையோ, அதுவரை உங்களை அழைத்துச் செல்ல முடியாது. இப்போது நான் ஆத்மாக்களை அழைத்துச் செல்வதற்கு வந்திருக்கின்றேன். உங்களின் மீது பாவ கர்மத்தின் சுமைகள் உள்ளன. ஆத்மாக்களிடம் பேசுகின்றார். பாபா பரந்தாமத்திலிருந்து மாற்றாந்தேசத்தில் வந்துள்ளார். நம்முடைய தேசமாகிய சொர்க்கத்தை ஸ்தாபனை செய்கின்றார். அவர் அங்கு வரவேண்டியதில்லை. இங்கு நீங்கள் துக்கத்தால் அழைக் கின்றீர்கள். ஒரே சமயத்தில் வந்து அனைத்து ஆத்மாக்களையும் திரும்பி அழைத்துச் செல்கின்றேன். சந்தோஷமாகச் சென்றாலும் சரி, விருப்பமில்லாது சென்றாலும் சரி, அவசியம் செல்ல வேண்டும். எல்லையற்ற தந்தை, காலனுக்கெல்லாம் காலன் ஆத்மாக்களை அழைத்துச் செல்கின்றார். அனைத்து மனிதர்களையும் அழிக்க வருகின்றார். கணவன், மனைவி இருக்கின்றார்கள். மனைவி, கணவன் இறந்து விட்டால் எவ்வளவு அழுகின்றார்கள். அச்சமயம் கூறுகின்றார்கள் என்னையும் அழைத்துச் சென்றுவிடுங்கள், எனக்கு எதுவுமே தேவையில்லை. ஆனால் தூய்மை யில்லாதவர்களை அழைத்துச் செல்ல இயலாது. ஆதலால் தூய்மையாக ஆக்கவே வந்துள்ளேன். எப்போது அசரீரியாக ஆகின்றோமோ, அப்போதுதான் தூய்மை ஆக முடியும். தேகம் மற்றும் தேக சம்மந்தம் யாவற்றையும் மறக்க வேண்டும். தந்தையாகிய என் ஒருவனை மட்டும் நினைவு செய்யுங்கள். உங்களின் பாவ கர்மங்கள் அழிந்துவிடும். சிறந்த வழியினைக் கூறுகின்றேன் கல்ப, கல்பமும் உங்களுக்குத் தெரியும் உடல் யாவுமே மண்ணாக ஆகிவிடும். ஹோலிகா விழாவில் கயிறு மட்டும் எரியாது, அதுபோல் ஆத்மாவும் எரியாது. மற்றப்படி இந்த காடு தீ பிடித்து எரியப்போகின்றது. அனைத்து உடலும் எரிந்து சாம்பலாகிவிடும். ஆத்மா தூய்மையாக ஆகிவிடும்.

ஆத்மாவை தூய்மையாக ஆக்க நிரந்தரமாக தேகி (ஆத்ம) அபிமானியாக முயற்சி செய்ய வேண்டும். தேகம் இருந்தாலும் தன்னை ஆத்மா என்று புரிந்து பாபாவிடம் யோகம் செய்ய வேண்டும். எவ்வாறு சந்நியாசிகள் பிரம்மத்துடன் அதாவது தத்துவத்துடன் யோகம் செய்கின்றார் கள். நாங்கள் தத்துவத்துடன் கலந்து விடுவோம் என்று கூறுகின்றார்கள். ஆனால் சரீரத்தை விடுவதில்லை. தத்துவத்தின் மீது அதாவது பிரம்மத்தின் மீது நினைவு (யோகம்) செய்து செய்து பிரம்மத்தில் கலந்து விடுவோம் என்கிறார்கள். இதனால் அவர்களை தத்துவ ஞானி, பிரம்ம ஞானி என்று கூறுகின்றனர். தத்துவத்தின் ஞானம் உள்ளஓ உங்களுக்கு நாம் ஆத்மாக்கள் தத்துவத்தில் வசிக்கிறோம் என்பது தெரியும். அவர்களோ நாங்கள் தத்துவத்தில் கலந்து விடுவோம் என புரிந்து கொள்கின்றனர். ஒரு வேளை. நாங்கள் அங்கு சென்று வசிப்போம் என்று கூறினாலாவது சரியாக இருக்கும். ஆத்மா ஐக்கியம் ஆவதில்லை. நீர்க்குமிழியின் உதாரணம் கூறுவது தவறானது. ஜோதியில் ஐக்கியம் ஆவது என்ற விசயமே இல்லை. அழிவற்ற ஆத்மாவில், அழிவற்ற பாகம் உள்ளது. ஒருபோதும் அழிக்கவே முடியாது. சந்நியாசிகள் விகாரங்களை சந்நியாசம் செய்கின்றார் கள். யாருமே திரும்பிச் செல்வதில்லை. இங்கு தான் மறுபிறவி எடுக்கின்றார்கள். எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே இருக்கின்றது. அனைவரும் சதோ, ரஜோ, தமோ என்ற நிலையைக் கடந்து செல்ல வேண்டும். இது நாடகத்தில் பதிவாகியுள்ளது. இப்போது பார்த்தால் பலவிதமான நோய்கள்

உள்ளன. முன்னால் இத்தனை நோய்கள் கிடையாது. யாவும் நாடகத்தில் பதிவாகியுள்ளது. உங்களுக்குத் தெரியும் பாபா வந்துள்ளார், அனைத்து ஆத்மாக்களையும் திருப்பி அழைத்துச் செல்வதற்கு. பாபா எங்களை திருப்பி அழைத்துச் செல்லுங்கள் என்று கூறுகின்றார்கள். அனைவருக்கும் முக்தி, ஜீவன்முக்தி கிடைக்கும். அனைவரும் சத்யுகத்தில் வர முடியாது. யார், யார் எந்த நேரத்தில் வருகின்றார்களோ, அதே சமயத்தில், அதே தர்மத்தில் மீண்டும் வர வேண்டியதாக இருக்கும். உங்களுக்குத் தெரியும் எந்தெந்த தர்மம் எந்த சமயத்தில் வருகின்றது. பாபா கூட கல்பத்திற்கு முன்பு வந்ததைப் போலவே வந்திருக்கின்றார். இத்தனை ஆத்மாக் களையும் திருப்பி அழைத்து செல்கின்றார். இந்த பூமிக்கு எவ்வளவு உரம் கிடைக்கின்றது. புதிய உலகத்திற்கு உரம் வேண்டுமல்லவா! அனைத்து மனிதர்கள், மிருகங்கள் இறந்து விடுவார்கள், உரமாகிவிடும். பின்பு சத்யுகத்தில் நல்ல பழங்கள் கிடைக்கும். இதனை குழந்தைகளாகிய நீங்கள் சாட்சாத்காரம் பார்த்தீர்கள்.

பாபா காலனுக்கெல்லாம் காலன் என்பது குழந்தைகளுக்குத் தெரியும். அனைவரும் கூறுகின்றார்கள், நாங்கள் மகிழ்ச்சியாக உங்களுடன் வருகின்றோம். எங்களை அழைத்துச் செல்லுங்கள். இங்கு எங்களுக்கு மிகவும் துக்கமாக உள்ளது.. இந்த உலகம் துக்கத்தினை கொடுக்கக் கூடிய உலகம். ஒருவர் மற்றவருக்கு து:க்கமான உலகத்தில், துக்கத்தினைக் கொடுக் கின்றார்கள். அளவற்ற துக்கம் உள்ளது. இப்போது தங்களை சுகமான உலகத்திற்கு அழைத்துச் செல்ல வந்திருக்கின்றேன். இப்போது ஒருவரை மட்டும் நினைவு செய்தால் ஆஸ்தியைப் பெற முடியும். இல்லையென்றால் இராஜ்யத்தின் முழுமையான ஆஸ்தியைப் பெற முடியாது, பிரஜையாக சென்றுவிடுவீர்கள். பாபா வந்து இராஜ்யத்தின் சுகத்தினைத் தருகின்றார். எந்த ஒரு தர்மஸ்தாபகர்களும் இராஜ்யத்தினை ஸ்தாபனை செய்வதில்லை. தற்போது இரகசியமான வேடத்தில் இராஜ்யத்தினை ஸ்தாபனை செய்து கொண்டு இருக்கின்றோம். யாருக்குமே தெரியாது. சத்யுகத்தில் இலட்சுமி, நாராயணன் எப்படி இராஜ்யத்தினை ஸ்தாபனை செய்தார்கள்? உடல் உள்ள தேவதைகள் எங்கிருந்து வந்தார்கள்? எப்போது கலியுகத்தில் அசுரர்கள் இருந்தார்கள்? அசுரர் களுக்கும் தேவர்களுக்கும் சண்டை என்பது நடைபெறுவதில்லை. சண்டை என்ற பேச்சே இல்லை. அங்கு காமம் என்ற விகாரமும் இருக்காது. பின்பு ஏன் யுத்தம் நடைபெற்றதாகக் காட்டி யுள்ளார்கள், குழம்பி உள்ளார்கள். அதே உலகம் தான்; சமயம் மட்டுமே மாறிவிடும். இது எல்லையற்ற பகல், எல்லையற்ற இரவு. சத்யுகம், திரேதாயுகம் பகல் என்று கூறப்படுகிறது, அங்கு சண்டைகள் என்பதே கிடையாது. ஆனால் எப்படி இராஜ்யம் அடைந்தார்கள். கலியுகத்தில் இராஜ்யம் கிடையாது. பாபா, எவ்வளவு ஆச்சர்யமான விஷயம் தங்களுடைய ஸ்தாபனையின் காரியம்! என கூறுகிகின்றனர். இத்தனை குழந்தைகளையும் சுகமாக ஆக்குகின்றீர்கள். மற்றபடி அவரவர்களின் முயற்சிக்கேற்ப உயர்ந்த பதவியை அடைகின்றார்கள். உங்களுக்குத் தெரியும் ஐயாயிரம் ஆண்டிற்குப் பின்னர் பரமாத்மா வருகின்றார். சிலர் பிரபு என்றும், சிலர் இறைவன் என்றும் கூறுகின்றார்கள், தந்தையல்லவா? தந்தை என்று கூறுவது எவ்வளவு நன்றாக உள்ளது. நம்முடைய தந்தை ஈஸ்வரன். பிரபு என்று கூறும்போது அவ்வளவு மகிழ்ச்சியாக இருப்பதில்லை. கடவுள் என்று கூறும்போது சர்வவியாபி என்று எண்ணுகிறார்கள். தந்தை என்று கூறும்போது சர்வவியாபி என்று சொல்ல முடியாது. இப்போது நீங்கள்

ஆத்மாக்கள் கேட்டுக் கொண்டு இருக்கின்றீர்கள். நம்முடைய பாபா வந்துவிட்டார் என்று புரிந்து கொண்டீர்கள். நம்மை யோகத்தால் தூய்மையாக ஆக்குகின்றார். அப்பா, டீச்சர், சத்குருவை நினைவு செய்ய வேண்டும். இங்கு குழந்தைகளுக்கு நேரில் வரும்போது உணர்வு ஏற்படுகின்றது. நாம் ஆத்மா உடல் மூலமாக நமது பாகத்தை நடித்துக் கொண்டு இருக்கின்றோம். நம்மை பாபா அழைத்துச் செல்ல வந்திருக் கின்றார். பாபாவை (யோகம்) நினைவு செய்ய, செய்ய பாபாவிடம் சென்று விடுவோம். சில சந்நியாசிகள் உத்தமமாக இருப்பார்கள்; அமர்ந்திருக்கும் பொழுதே உடலை விட்டுவிடுகின்றார்கள். நம் ஆத்மா பிரம்மத்தில் சென்று ஐக்கிய மாகிவிடும் என்று நினைக்கின்றார்கள். அனைவரும் மோட்சத்திற்காக, முக்திக்காக முயற்சி செய்கின்றார்கள். ஏனென்றால் உலகத்தில் மிகவும் துக்கம் உள்ளது. ஆதலால் மோட்சம் அல்லது முக்தியை விரும்புகின்றார்கள். அவர்களுக்குத் தெரியாது உலகம் என்ற சக்கரம் சுழல்கின்றது. நம்முடைய பார்ட் அவசியம் அழிவற்றது.

உங்களுடைய புத்தி ஜின் பூதம் மாதிரியாக இருக்க வேண்டும். பூதத்தின் கதை உள்ளது அல்லவா! பூதம் கூறுமாம் எனக்கு வேலை கொடுக்கவில்லை என்றால் விழுங்கிவிடுவேன். பின்பு அதற்கு வேலை கொடுத்தார்கள். ஏணிப்படி ஏறவேண்டும், இறங்க வேண்டும். உங்களுக்கும் பாபா கூறுகின்றார் என்னிடம் புத்தியோகத்தினை வையுங்கள். இல்லையெனில் மாயை என்ற பூதம் விழுங்கிவிடும். மாயை என்ற பூதம் யோகம் செய்யவிடுவதில்லை. நல்ல, நல்ல பலசாலி, கெட்டிக் காரர்களைக் கூட அப்படியே பச்சையாக விழுங்கி விடுகின்றது.. உங்களுக்குத் தெரியும் பாபா கற்றுத் தருவதற்காக வந்திருக்கின்றார். இப்போது குழந்தைகளை சந்திக்க நேரில் வந்துள்ளார். இப்போது என்னை நினைவு செய்யுங்கள்; இல்லையெனில் மாயை விழுங்கிவிடும். உங்களுடைய நன்மைக்காக இந்த வேலை கொடுத்துள்ளார். நீங்கள் உலகத்திற்கே எஜமானராக ஆகிவிடுவீர்கள். தன்னை ஆத்மா என்று புரிந்து கொண்டு உடல் மீதுள்ள பற்றுதலை நீக்கி விடுங்கள். சந்நியாசம் என்றால், தேகம் சம்மந்தம் அனைத்தையும் சந்நியாசம் செய்ய வேண்டும். தன்னைத் தான் ஆத்மா என்று புரிந்து கொள்ளுங்கள். உங்களுக்குத் தெரியும், ஞானம் மற்றும் யோக பலத்தால் பாபா நம்மை தேவி தேவதைகளாக ஆக்குகின்றார். இராஜ்யம் ஸ்தாபனை ஆகிக் கொண்டிருக்கிறது. இது இராஜயோகம். இந்த விஷயங்கள் சாஸ்திரங்களில் இல்லை. பாண்டவர்கள் இராஜயோகம் கற்றுக் கொண்டார்கள் பின்பு என்ன ஆயிற்று? மலை மீது ஏறி உருகிப் போய்விட்டார்கள், இறந்து விட்டார்கள். பின்பு இராஜ்யம் ஸ்தாபனை ஆனது எப்படி தெரியும்? இப்போது இம்மாதிரியான விஷயங்களை நீங்கள் புரிந்து கொண்டீர்கள். இப்போது பாபா கூறுகின்றார் ,என்னை நினைவு செய்யுங்கள், டிரஸ்டியாக ஆகி ஸ்ரீமத்படி நடங்கள். ஒவ்வொரு விஷயத்திலும் வழி கேட்டு நடக்க வேண்டும். குழந்தைகளுக்கு திருமணம் செய்து வைப்பதற்கு மறுப்பு கூறுவதில்லை. ஒவ்வொரு வரின் கணக்கும் தனித்தனியாக உள்ளது. எப்படிப்பட்ட குழந்தைகள், அவர்களுடைய கணக்கினைப் பார்த்து வழியைக் கூறுகின்றார். குழந்தைகளுக்கு திருமணம் செய்ய வேண்டும் என்றால் செய்யலாம். பணம் இருந்தால் வீடு கட்டுங்கள் மறுப்பதில்லை. குழந்தைகளுக்குத் திருமணம் செய்து கொடுத்து கணக்குகளை முடித்து விடுங்கள்.

இப்போது புரிந்து கொள்ளலாம் யாருக்கு நல்ல பதவி கிடைக்கும். எவ்வளவு சிரமமாக உள்ளது. இவற்றில் மிகவும் தொலைநோக்கு புத்தி இருக்க வேண்டும். இராஜ்யத்தினைப் பெற வேண்டும் என்றால் சாதாரண விஷயம் அல்ல. குழந்தைகளுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்து கணக்குகளை முடித்து கொள்ளுங்கள். யாருக்காவது கடன் கொடுக்க வேண்டியது இருந்தால் திரும்பிக் கொடுத்து கடனை முடித்து விடுங்கள். இவை கூட புரிந்து கொள்ள வேண்டிய விஷயம். கன்னியர் களுக்கு எந்தவிதமான சுமைகளும் கிடையாது. படைப்பவர் அனைத்து கடமைகளை செய்து முடிக்க வேண்டும் பின்பு பாபாவிற்கு வாரிசாக ஆக முடியும். மாயை கூட நன்றாகத் தொந்தரவு கொடுக்கும். நீங்கள் புரிந்து கொண்டீர்கள் பாபா மிகவும் இனிமையானவர். அனைவரையும் தூய்மையாகி திருப்பி அழைத்துச் செல்கின்றார். அம்மாதிரியான தந்தை மீது மிகுந்த அன்பு செலுத்த வேண்டும். மிகவும் இனிமையானவர் அல்லவா ! அப்படிப்பட்ட சத்யுகத்தில் அளவற்ற சுகம் இருக்கும். ஆதலால் சொர்க்கத்தினை யாவரும் நினைவு செய்கின்றார்கள். யாராவது இறந்து விட்டால் சொர்க்கத்திற்குச் சென்று விட்டார்கள் என்று கூறுவார்கள். எத்தனை இனிமையான பெயர்? எது கடந்து முடிந்து விடு கின்றதோ, பக்தி மார்க்கத்தில் புகழ் பாடுகின்றார்கள். இம்மாதிரியான விஷயங்கள் சத்யுகம், திரேதா யுகத்தில் இருக்காது. நினைவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை. பாபா பூதத்தினைப் போல் காரியம் கொடுத்துள்ளார். தன்னைத் தான் ஆத்மா என்று புரிந்து கொண்டு பாபாவை நினைவு செய்யுங்கள், இல்லையெனில் மாயை என்ற பூதம் விழுங்கிவிடும். நினைவு செய்ய வேண்டும். ஆத்மா என்று நிச்சயம் செய்து பாபாவை நினைவு செய்ய வேண்டும். சரீர நிர்வாகத்திற்கான காரியங் களைச் செய்ய வேண்டும். நீங்கள் கர்ம யோகிகள் எட்டுமணி நேரம் சரீர நிர்வாகம் செய்ய வேண்டும். பின்பு முயற்சி செய்யுங்கள் தனது முயற்சிக்காக என்று எட்டு மணி நேரம் ஒதுக்க வேண்டும். நாம் பாபாவுடையவர்களாக ஆகிவிட்டோம் என்று புரிந்து கொள்ளுங்கள். இந்த உடல் பழையது, இதன் மீது பற்றுதல் வைக்கக் கூடாது. நினைவு செய்யச், செய்ய பற்றுதலை அழித்து, அழித்து அதன் பிறகும் ஏதாவது பற்றுதல் இருந்தால் இராஜ்ய பாக்கியத்தினைப் பெற முடியாது. உலகத்திற்கே எஜமானராக முயற்சி செய்ய வேண்டும்.

பாபா வந்துள்ளார் துக்கமான உலகத்தில் இருந்து விடுதலை செய்வதற்கு. ஆதலால் வழிகாட்டி, விடுவிப்பவர், பதீத்பாவனன் என்று கூறுகின்றார்கள், வழிகாட்டியாகவும் உள்ளார். இராவண இராஜ்யத்தினை அழித்து இராம இராஜ்யத்தினைக் ஸ்தாபனை செய்ய பாபா வர வேண்டியதாக உள்ளது. அவர் தான் சாந்தியை ஸ்தாபனை செய்கின்றார். அவருக்கு உதவி செய்பவர்களுக்கு அமைதியின் பரிசு கிடைக்கின்றது. அமைதியை ஸ்தாபனை செய்யக் கூடியவர் களுக்கு அமைதியான இராஜ்யத்தினை கொடுக்கின்றார். அன்பான பாபா கல்ப, கல்பம் ஆஸ்தியைக் கொடுக்கின்றார். எந்தளவு ஸ்ரீமத்படி நடக்கின்றோமோ, அந்தளவு சிரேஷ்டமானவர் களாக ஆகின்றோம். உங்களுக்குத் தெரியும் ஸ்ரீ, ஸ்ரீ மூலமாக நாம் ஸ்ரீ இலட்சுமி ஸ்ரீ நாராயணன் ஆகின்றோம். 21 ஜென்மங்களுக்கு சூர்ய வம்சத்தின், சந்திர வம்சத்தின் இராஜ்யம் ஸ்தாபனை ஆகின்றது. நல்லது.

இனிமையிலும் இனிமையான வெகுகாலம் கழித்து காணாமல் கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்கு தாய், தந்தையான பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும்

காலை வணக்கங்கள். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

(1) தொலைநோக்கு பார்வையுடன் புரிந்து கொண்டு கர்மத்தின் பந்தனங்களை முடித்து விட வேண்டும். எந்தவிதமான கணக்கு வழக்கு, கடன் இருந்தால் திருப்பி கொடுத்து முடித்து விட்டு சுமையின்றி இலேசானவர்களாக ஆகி வாரிசாக வேண்டும்.

(2) கர்ம யோகியாக ஆகி கர்மம் செய்ய வேண்டும். எட்டு மணி நேரம் முயற்சியும் செய்ய வேண்டும். அனைவர் மீதும் உள்ள பற்றுதலை அவசியம் நீக்கி விட வேண்டும்.

வரதானம் : இல்லறத்தில் இருந்தாலும் சமர்ப்பணமாகி சேவையின் ஈடுபாட்டில் இருக்கக் கூடிய, பாப்தாதாவின் மன சிம்மாசனதாரி ஆகுக.

எந்தக் குழந்தைகள் இல்லறத்தில் இருந்தாலும் சமர்ப்பணமாகி இருக்கிறார்களோ, அவர்களின் சகயோகத் தினால் சேவையின் விருட்சம் பலன் தரக்கூடியதாக ஆகி விடுகிறது. அவர்களின் சகயோகமே விருட்சத்திற்கான நீர் ஆகி விடுகிறது. எப்படி விருட்சத்துக்கு நீர் கிடைப்பதால் நல்ல பழம் (பலன்) கிடைக்கிறதோ, அது போல் சிரேஷ்ட சகயோகி ஆத்மாக்களின் சகயோகத்தால் விருட்சம் பலன் தரக்கூடியதாக ஆகி விடுகிறது. அவ்வாறே சேவையின் ஈடுபாட்டில் சதா இருப்பவர்கள், இல்லறத்தில் இருந்தாலும் சமர்ப்பணமாகி நடந்து கொள்ளும் குழந்தைகள் பாப்தாதாவின் மன சிம்மாசனத்தில் அமர்பவர் ஆகிறார்கள்.

சுலோகன்: குறைந்த சமயத்தில் சங்கல்பங்களை மாற்றியமைக்கவும், நிறுத்தி வைப்பதற்குமான யுக்தியைக் கற்றுக் கொள்வீர்களானால் புத்தியின் சக்தி வீணாகிப் போகாது.